1974 சனவரி 23]

Production of Mangoes

*107 Q.—THIRU N. DENNIS: will the Hon. the Minister for Agriculture be pleased to state the total quantity of mangoes grown in this State and the total quantity exported during this year?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, 1971-72-ல் 290,000 டன் மாம்பழங்கள் உற்பத்தி செய்யப்பட்டன 12 டன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ்: தலைவர் அவர்களே, மாம்பழ உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை? முந்தைய ஆண்டைவிட கடந்த ஆண்டில் ஏற்றுமதி அதிகரித்திருக்கிறதா? மாம்பழமாக அனுப்புவதை விட, பக்குவப்படுத்தி, ஃப்ரூட் ஜூஸாக அனுப்ப அரசு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, மாம்பழங்கள் பக்குவம் செய்துதான் அனுப்பப்படுகின்றன. டின்களில் அடைத்து இப்பொழுது அனுப்பி வருகிறோம். முக்கியமாக ரஷ்ய நாட்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 9.30)

THIRU B. VENKATASWAMY: Sir, I came to understand that there is a large area in mango plantation in Dharmapuri district. May I know from the Hon. Minister for Agriculture whether any package scheme will be implemented so as to increase the export potential which is already there and also to cater to the export needs?

THE HON. THIRU Si. Pa. ADITANAR: There is not only great export potential but there is also a good internal market. It is quite true that Dharmapuri district is one of the largest producing areas as far as mangoes are concerned. As a matter of fact, the Dharmapuri district leads in the production of mangoes and the suggestion of the hon. Member would be taken into account.

திரு. த. சோணையா: தலைவர் அவர்களே, வெளிநாட்டுக்கு மாம்பழம் ஏற்றுமதி செய்யப்படுகிறதே, அது உபரியாக இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1974 சனவரி 23

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, இந்த நாட்டில் டின்னிலே அடைத்த மாம்பழங்களை அதிகம் சாப்பிடுவது இல்லை. பழங்களாகச் சாப்பிடுகிறார்கள். ஏறத்தாழ 3 லட்சம் டன்னில் 12 ஆயிரம் டன் மட்டும் டின்னில் அடைத்து வெளிநாட்டுக்கு அனுப்பி வருகிறோம்.

Research on Pine apple

* 108 Q.—THIRU R. R. MUNUSAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any research into the cultivation and production of Pine apple has been conducted in this State; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) ஆம்.

(இ) வேளாண்மைப் பல்கலைக் கழகம் இந்த ஆராய்ச்சியை நடத்தி வருகிறது.

திரு. ரா. ரா. முனுசாமி: அன்னசிப் பழம் நமது மாநிலத்தில் எந்த எந்த மாவட்டத்தில் விளைவிக்கப்படுகிறது என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: சேலம் மாவட்டத்தில் விளைகிறது. இப்போது வடாற்காடு மாவட்டத்தில் விளைவிக்க திட்டங்கள் செயல்முறைக்கு வந்து கொண்டிருக்கிறது.

திரு. நா. வீராசாமி : இன்றையதினம் அன்னசிப் பழத்தை நம்பி கன்னியாகுமரியில் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிற காரணத்தினால், கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள அரசாங்க நிலத்தில் அன்னசிப் பழத்தை பயிரிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : கன்னியாகுமரி மாவட்டத்தில் அந்தத் தொழிற்சாலை இன்னும் துவங்கப்படவே யில்லை. ஆரம்பிக்கப்பட்டு மூடப்படவில்லை. அன்னசிப் பழம் அங்கே தாராளமாகக் கிடைக்கிறது. மற்ற இடங்களிலும் புதிதாக உற்பத்தி செய்யப்படுகிறது.